2004 நவம்பர் 19] [திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்]

அட்டைகளுக்கும் மண்ணெண்ணெய் வழங்க ஏதுவாக இருக்கும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய துரிதக் கண்காணிப்பாலும், ஆணையின் பெயரிலும் இதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன். குடும்ப அட்டைகள் டிசம்பர் மாதம் முதல் தேதியிலே தொடங்கி இறுதிக்குள் வழங்க உள்ளது. அப்படி புதிதாக வழங்கப்பட இருக்கிற குடும்ப அட்டைகளுக்குரிய மண்ணெண்ணெயை நீங்கள் அங்கம் வகிக்கிற மத்திய அரசிலேயிருந்து பெற்றுக் கொடுத்தால், புதிதாக வழங்க இருக்கிற குடும்ப அட்டைகளுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்படும் என்பதைப் பணிவோடு சொல்லி அமர்கிறேன். அதுவரை மண்ணெண்ணெயைத் தவிர மற்ற அனைத்துப் பொருட்களும் வழங்கப்படும்.

5. கவன ஈர்ப்பு

சென்னை குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க தெலுங்கு–கங்கா திட்டம் மூலம் நிரந்தரமாகத் தண்ணீர் பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஞானசேகரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னை குடிநீர்ப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்க்க தெலுங்கு-கங்கா திட்டத்தின் மூலம் நிரந்தரமாகத் தண்ணீர் பெறவேண்டிய அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

***மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

மறைந்த தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், மறைந்த ஆந்திர முதல்வர் மாண்புமிகு

திரு. என்.டி. ராமாராவ் அவர்களும் 18-04-1983 அன்று கையெழுத்திட்ட ஒப்பந்தத்தின்படி தமிழ்நாடு ஆந்திர எல்லைப் பகுதியில் உள்ள ஊத்துக்கோட்டை அருகில் 12 T.M.C. தண்ணீர் கீழ்க்கண்ட மாதங்களில் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது:

1)	ஜூலை முதல் அக்டோபர் வரை (4 மாதங்கள்)	8 T.M.C.
2)	ஜனவரி முதல் ஏப்ரல் வரை (4 மாதங்கள்)	4 T.M.C.
	மொத்தம்	12 T.M.C.

இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள்:

ஸ்ரீசைலம் நீர்த்தேக்கத்திலிருந்து வெலுகோடு மற்றும் இடைநிலை நீர்த்தேக்கம் 1-ன் வழியாக சுமார் 178 கி.மீ. கால்வாய் வழியாக சோமசீலா நீர்த்தேக்கத்தில் நீரைப் பெற்று அங்கிருந்து 45 கி.மீ. நீள கால்வாய் வழியாக கண்டலேறு நீர்த்தேக்கத்திற்குச் செலுத்தி, அங்கிருந்து தமிழ்நாடு எல்லை வரை 152 கி.மீ. நீள கால்வாய் வழியாக நீர் வந்தடைந்து, மேலும் தமிழ்நாடு பகுதியில் 25 கி.மீ. கால்வாய் வழியாக பூண்டி நீர்த்தேக்கத்திற்கு வந்தடையும்.

ரூ.2,191 கோடி மொத்த மதிப்பீடுள்ள இத்திட்டத்திற்கு தமிழ்நாட்டின் பங்கு ரூ.522 கோடியாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இதில், இதுவரை ரூ.512 கோடி தமிழ்நாடு அரசால் ஆந்திர அரசுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஸ்ரீசைலம் நீர்த்தேக்கத்திலிருந்து சோமசீலா நீர்த்தேக்கத்திற்கு வருவதற்கு முன் அமைந்துள்ள கால்வாயில் சுமார் 13.8 கி.மீ. நீளத்திற்கு நில ஆர்ஜிதம் சம்பந்தமாக நீதிமன்ற வழக்குகளால் தடைப்பட்டிருந்த பணிகள் இப்போது மீண்டும் துவங்கப்பட்டுள்ளன. இப்பணிகள் இன்னும் இரண்டு ஆண்டுகளில் முடிவடைந்துவிடும் என்று ஆந்திர அரசு தெரிவித்துள்ளது.

சோமசீலா நீர்த்தேக்கத்தில் தற்போது 50 T.M.C.(முழு கொள்ளளவு 78 T.M.C.) அளவே நீர் தேக்கி வைக்க முடியும். அதேபோல கண்டலேறு நீர்த்தேக்கத்தில் தற்போது 30 T.M.C. (முழு கொள்ளளவு 59 T.M.C.) அளவே நீர் தேக்கி வைக்க முடியும். முழு கொள்ளளவு நீர் தேக்கி வைக்க தேவைப்படும் நில ஆர்ஜிதப் பணிகள் மார்ச் 2005-க்குள் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2004 நவம்பர் 19] [திரு. கே.பி. அன்பழகன்]

மேற்குறிப்பிட்ட இவை தவிர மற்ற வேலைகள் அனைத்தும் முடிவடைந்துவிட்டன. ஆயினும், ஸ்ரீசைலம்-சோமசீலா பகுதியில் 13.8 கிலோ மீட்டர் நீளத்திற்கு கால்வாய் முடிவடையாததால், தற்போது ஸ்ரீசைலத்திற்கு அனுப்பப்படும் நீர் பனக்கார்லா ரெகுலேட்டரிலிருந்து நிப்புலவாகு வெள்ளக் கால்வாய், கலேறு ஆறு, குண்டு ஆறு மேலும் பென்னா ஆறுகளின் வழியாக சோமசீலாவிற்கு மாற்றுப் பாதையில் அனுப்பப்படுகிறது.

கண்டலேறு நீர்த்தேக்கத்திலிருந்து 29-09-1996 முதல் சென்னைக்கு நீர் அனுப்பப்பட்டு தமிழ்நாடு எல்லையில் பெறப்பட்ட நீரின் அளவு வருமாறு:

வருடம்	பெறப்பட்ட நீரின் அளவு (T.M.C)
1996	0.076
1997	2.292
1998	2.812
1999	1.830
2000	3.591
2001	3.437
2002	3.342
2003	...
2004	0.2071

2003-2004 ஆம் வருடங்களில் ஆந்திராவில் போதிய மழை இல்லாததால், தமிழ்நாட்டிற்கு நீர் வழங்கவில்லை. ஆயினும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சீரிய முயற்சியால் கண்டலேறுவிலிருந்து தேங்கியுள்ள அடி நீரை பம்ப் செய்து 08-03-2004 முதல் 20-04-2004 முடிய 0.2071 T.M.C. பெறப்பட்டது.

சென்னையில் நிலவிவரும் கடுமையான குடிநீர்ப் பற்றாக்குறையைச் சமாளிக்க மாண்புமிகு ஆந்திர முதல்வருடன் தொடர்புகொண்டு,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[திரு. கே.பி. அன்பழகன்] [2004 நவம்பர் 19

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உத்தரவுப்படி, பொதுப் பணித் துறை மற்றும் சென்னை குடிநீர் வாரிய அதிகாரிகள் நிபுணர் குழு ஒன்று 15-09-2004 மற்றும் 16-09-2004 அன்று ஆந்திர மாநிலத்திற்குச் சென்று சென்னைக்கு துரிதமாக நீர் அனுப்ப ஆந்திர அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து வழிமுறைகளுக்கு ஏற்பாடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 01-10-2004 அன்று மாண்புமிகு ஆந்திர முதல்வரைச் சந்தித்து சென்னையில் நிலவிவரும் கடும் குடிநீர்ப் பற்றாக்குறையை விளக்கி, ஸ்ரீசைலம் நீர்த்தேக்கத்திலிருந்து கூடுதல் நீர் திறந்து சென்னைக்கு அனுப்புமாறு வேண்டுகோள் விடுத்ததையடுத்து, ஆந்திர முதல்வர் அவர்கள் அக்டோபர் 15 ஆம் தேதிவாக்கில், நீர் திறந்துவிட ஒப்புக்கொண்டார்.

மேலும், 18-10-2004 அன்று ஆந்திர அரசு மற்றும் தமிழக அரசு தலைமைச் செயலாளர்கள் தலைமையில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் திருப்பதியில் நடைபெற்றது. இதில் தெலுங்கு கங்கைத் திட்டத்தின் அனைத்து வேலைகளும் முழு அளவில் துரிதமாக முடிப்பதற்கும், ஒப்பந்தப்படி சென்னைக்கு குடிநீர் திறந்து விடுவதற்கும் கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

தற்போது சோமசீலாவில் 30 T.M.C. நீரும், கண்டலேறுவில் 7.74 T.M.C. நீரும் உள்ளது. இதில் கண்டலேறுவில் 6.4 T.M.C. அளவுக்கு மேல் உள்ள நீரைத்தான் சென்னைக்கு அனுப்ப முடியும். ஆகவே போதிய நீர்மட்டம் தற்போது வந்தடைந்துவிட்டதால், சென்னைக்கு கூடியவிரைவில் நீர் திறந்துவிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன், ஒரு கேள்வி கேளுங்கள். காப்பாற்றுங்கள். (சிரிப்பு)

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது சோமசீலாவிலே 50 T.M.C. தண்ணீரும், அதேபோல கண்டலேறுவிலே 30 T.M.C. தண்ணீரும் நிரம்பி இருப்பதாகக் கூறுகிறார்கள். இன்றுகூட தினமணி போன்ற பத்திரிகையிலே இப்பொழுது சோமசீலாவிலும் சரி, அதேபோல ஸ்ரீசைலத்திலும், கண்டலேறுவிலும் அணை நிரம்பி இருப்பதாகக் கூறுகிறார்கள். அப்படி இருக்கிற காலகட்டத்தில், முதலமைச்சர் அவர்கள், ஏற்கெனவே ஆந்திரப் பிரதேச முதலமைச்சரைச் சந்தித்துப் பேசி, தண்ணீர் வழங்க வேண்டுமென்று 1-10-2004 அன்று கேட்டிருக்கிறார்கள். அதேபோல

2004 நவம்பர் 19] [திரு. சி. ஞானசேகரன்]

நம்முடைய தமிழகத்தினுடைய தலைமைச் செயலாளர் அவர்களும் ஆந்திரச் செயலாளருடன் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார்கள். அந்தப் பேச்சுவார்த்தையினுடைய நிலை எந்த அளவில் இருக்கிறது? இப்போது கண்டலேறு தண்ணீர் திறந்துவிடப்படக்கூடிய நிலையில் நிரம்பி வழிகிறது என்று கூறுகிறார்கள். தமிழக அரசு இப்பொழுது ஆந்திர முதலமைச்சரை அணுகி, கேட்டு, தண்ணீர் திறந்துவிடுகின்ற அளவிற்கு தமிழகத்திற்கு மீண்டும் தண்ணீர் வரும் என்கிற சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறீர்களா, இல்லையா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்டலேறுவில் தண்ணீர் நிரம்பி வழிகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். அங்கே 59 T.M.C. தண்ணீர் இருந்தால்தான் அந்த ஏரியானது நிரம்பி வழியும். அங்கே இப்பொழுது இருப்பது 7.4 T.M.C. தண்ணீராகும். அந்த கண்டலேறுவிலே 6.4 T.M.C.-க்கு மேலாக தண்ணீர் வரப்பெற்ற பிறகுதான் நம்முடைய சென்னைக்கு தண்ணீர் விடுகின்ற நிலை ஏற்படும்.

பிற்பகல் 2-10

மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த அக்டோபர் மாதம் 1 ஆம் தேதி ஆந்திர மாநில முதல்வரைச் சந்திக்கின்ற நிகழ்வு தெரிந்து, அதற்கு முன்பாக செப்டம்பர் 29 அல்லது 30 ஆம் தேதி என்று நினைக்கிறேன், வருகின்ற அக்டோபர் 15 ஆம் தேதி சென்னைக்கு தண்ணீர் வரும் என்று தவறான தகவலை மாண்புமிகு உறுப்பினர் திரு. கருணாநிதி அவர்கள் பத்திரிகை வாயிலாகத் தெரிவித்திருந்தார்கள். ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1-10-2004 அன்று ஆந்திர மாநில முதல்வரைச் சந்தித்த பிறகுதான் அங்கே ஸ்ரீசைலத்திலிருந்து சோமசீலா வரை வந்திருந்த தண்ணீரானது கண்டலேறுவுக்கு கூடுதலாகத் திறக்கப்பட்டது. இன்று கண்டலேறுவிலே 7.4 T.M.C. தண்ணீர் இருக்கிறது. மேலும் கண்டலேறுவுக்கு தண்ணீரானது வந்துகொண்டிருக்கிறது. இந்த நிலையிலே அங்கே அந்தத் தண்ணீர் அளவானது கூடுதல் ஆன பிறகு அங்கேயிருந்து சென்னைக்கு தண்ணீரானது, குடிதண்ணீருக்குத் தேவையான அளவு விடுகின்ற வகையிலே அவர்கள் உத்தரவாதத்தைக் கொடுத்திருந்தாலும் இன்னும் திறக்கப்படவில்லை. அதைக் கூடியவிரைவிலே திறப்பதற்கு ஆவன செய்வார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.